DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:145/2021 Deposition of Witness for : P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | ராமசாமி | Calling | |
| Father's Name | : | குமரன் | Taluk | வெள்ளகோவில் |
| Age | : | | District | திருப்பூர் |
| Village | : | சொரியன்கிணத்துப்பாளையம் | | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 01-11-2025

**முதல் விசாரணை**

1. நான் வெள்ளகோவில் சொரியன் கிணத்து பாளையத்தில் குடி இருக்கிறேன். ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். இந்த சம்பவத்தில் இறந்து போன தங்கராஜ் என்பவர் என்னுடைய மாப்பிள்ளையின் தம்பி ஆவார். எதிரியை தெரியும். சுப்ரமணியன் மகளை ராக்கி கூட்டிச் சென்று விட்டார். வெளியே சென்றுவிட்டு திரும்ப வந்து விட்டார். பின்னிட்டு மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அவர்களை பிடித்து விட்டார்கள். பின்னிட்டு எதிரி தங்கராஜ் இடம் ஃபோன் செய்து மீண்டும் அந்த பெண்ணை தன்னுடன் சேர்த்து வைக்குமாறு கேட்டுள்ளார். தங்கராஜூம் சுப்ரமணியமும் அண்ணன் தம்பிகள். ராக்கி போன் பண்ணும் போது நீ எங்கடா இருக்கிறாய் என்று தங்கராஜ் கேட்டுள்ளார். பின்னிட்டு தங்கராஜூம் சுப்ரமணியமும் கச்சேரி வளர்ச்சிக்கு சென்று அவர்களுக்கு ராக்கியுடன் கைகலப்பாகியுள்ளது. 11.05.2017 ஆம் வருடம் இரவு சுமார் 9 மணிக்கு சுப்பிரமணியம் எனக்கு போன் செய்தார். ராக்கி அவருடைய தம்பியை குத்தி விட்டதாக என்னிடம் சொன்னார்.

2. காங்கயத்திலிருந்து ஈரோடு அரசு மருத்துவமனைக்கு கூட்டி சென்று விட்டதாக என்னிடம் சொன்னார். ஈரோடு அரசு மருத்துவமனைக்கு

செல்வதற்கு முன்பே அவர் இறந்து விட்டதாக சொன்னார். சுப்பிரமணி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கலாம் என்று சொன்னார். வெள்ளகோவில் காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கு சுப்பிரமணி புகார் கொடுத்தார். சுப்பிரமணி அணிந்திருந்த வெள்ளை சட்டையை கழற்றி போலீசாரிடம் என் முன்னிலையில் கொடுத்தார். மேற்படி சட்டையில் ரத்தக்கரை இருந்தது. போலீசார் என் முன்னிலையில் மேற்படி சட்டையை வாங்கிக் கொண்டார்கள். நான் அதற்கு கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் படிவம் 91 இல் உள்ள கையொப்பம் என்னுடைய தான் மேற்படி படிவம் 91 ஏற்கனவேஅ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சட்டையை என்னால் அடையாளம் சொல்ல முடியும். என்னிடம் காட்டப்படும் சட்டைதான் அன்று சுப்பிரமணி போலீசாரிடம் கொடுத்த சட்டை ஆகும். மேற்படி சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. தங்கராஜுன் போன் பட்டன் போன் ஆகும். நான் ஈரோடு சென்ற போது இரவு சுமார் 10 மணி இருக்கும். நான் காரில் சென்றேன். என்னுடன் முருகேசன் வந்தார் அவர் தங்கராஜின் அண்ணன் ஆவார். புகார் கொடுப்பதற்கு நான் முருகேசன் சுப்பிரமணி மற்றும் தங்கராஜ் உடைய மனைவி ஆகியோர் காவல் நிலையம் சென்றோம். நாங்கள் காவல் நிலையம் சென்ற போது இரவு சுமார் 11 மணி இருக்கும். வெள்ளக்கோவிலில் இருந்து ஈரோடு செல்வதற்கு சுமார் ஒரு மணி நேரம் ஆகும். ஈரோடு அரசு மருத்துவமனையில் சுமார் அரை மணி நேரம் இருந்தோம். அங்கு பிரேதத்தை சவகிடங்கில் பார்த்தோம். இரவு 11 மணிக்கு வெள்ளகோவில் காவல் நிலையம் வந்தபோது அங்கு லாக்கப்ரூமில் எதிரியை அடைத்து வைத்திருந்தார்கள் என்று சொன்னால் அதை நான் பார்க்கவில்லை. எதிரி நல்லூர் காவல் நிலையத்தில் சரண்டர் ஆகி அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் வெள்ளகோவில் போலீசார் நல்லூர் காவல் நிலையம் சென்று எதிரியை கூட்டிக் கொண்டு வந்தார்கள் என்று சொன்னால் சரிதான் இரவு 12 மணிக்கு கூட்டி வந்தார்கள். நான் கவுன்சிலராக இருந்தேன். நான்

திமுகவில் கவுன்சிலராக இருந்தேன்.

2. நான் நீதிமன்றத்தில் சொன்ன தகவல்களை எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சுப்பிரமணி சொல்லி தான் தெரியும் என்றாலும் சரிதான். சுப்பிரமணியின் வேட்டியில் ரத்தம் ஆகி இருந்ததா என்றால் அதை நான் பார்க்கவில்லை. சுப்பிரமணி தன்னுடைய சட்டையை கழற்றி போலீசாரிடம் கொடுத்துவிட்டு மாற்று சட்டையை அணிந்தாரா என்று நான் கவனிக்கவில்லை. சுப்ரமணியன் அண்ணனுக்கு என்னுடைய தங்கையை மணமுடித்துக் கொடுத்திருப்பதால் எனக்கு சொந்தம் என்பதால் புகார் கொடுப்பதற்கு நான் உடன் சென்றேன். புகாரை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. சுப்பிரமணிக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். போலீசார் புகாரை வாங்கியவுடன் அதை படித்துக் காட்டி சுப்பிரமணியத்திடம் உறுதி செய்து கொண்டு சுப்பிரமணியிடம் கையெழுத்து வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல வாங்கினார்கள். புகாரில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை காவல் நிலையத்தில் நான் ஒரு கையெழுத்துக்கள் போட்டேன். (தற்போது சாட்சி அங்கு எத்தனை கையெழுத்துக்கள் போட்டேன் என்று தனக்கு நினைவில்லை என சாட்சியம் அளிக்கிறார்).

3. சிவன்மதி எதிரியுடன் சென்றது தொடர்பாக கொடுக்கப்பட்ட புகாரின் போது நான் உடன் செல்லவில்லை என்றால் சரிதான். பின்னிட்டு மேற்படி சிவன் மதியையும் எதிரியையும் போலீசார் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்த போது நடந்த விசாரணையின் போதும் நான் அங்கு செல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி சிவன்மதி தன்னுடைய கணவருடனும் அல்லது அவருடைய அப்பாவுடனும் செல்ல மறுத்து விட்டதால் அவர் திருப்பூரில் இருக்கும் ஒரு ஹோமுக்கு அனுப்பி வைக்கப்பட்டார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. அவ்வாறு பிரித்து வைக்கப்பட்ட பிறகும் சிவன்மலை தொடர்ந்து எதிரியுடன் பேசி வந்த விபரம் எனக்கு தெரியுமா என்று சொன்னால் தெரியாது. ராக்கியை ஒழித்து விட்டால் சிவன்மதிக்கு அவரால் ஏற்பட்ட பிரச்சினை தீர்ந்துவிடும் என்று சிவன்மதியின் குடும்பத்தார் ராக்கியை தேடி வந்த விபரம்

எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. சொரியன் கிணத்துப் பாளையத்தில் தான் எதிரில் வீடு உள்ளது என்றால் சரிதான். சுப்பிரமணி மற்றும் தங்கராஜ் வீடும் அதே ஊரில் தான் இருந்தது. எதிரி தங்கி இருந்ததாக கூறப்படும் கச்சேரிவலசு மேற்படி ஊரிலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. எதிரி மேற்படி தங்கராசு மற்றும் சுப்பிரமணிக்கு பயந்து கொண்டு கச்சேரிவலசில் போய் பாதுகாப்புக்காக தங்கி இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. எதிரி சொல்லி மேற்படி இருவரும் மேற்படி இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் சுப்பிரமணியனும் தங்கராஜூம் தாங்களாகத்தான் எதிரியை தேடி சென்றுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. இறந்து போனவரும் புகார் கொடுத்தவர்களும் எனக்கு உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.11.01 19:34:19 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:145/2021 Deposition of Witness for : P.W.4**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : உதயகுமார் | Calling | | |
| Father's Name | : அர்ஜுனன் | Taluk | | வெள்ளகோவில் |
| Age | : | District | | திருப்பூர் |
| Village | : சொரியன்கிணத்துப்பாளையம் | | | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 01-11-2025

முதல் விசாரணை

1. இறந்துபோன தங்கராஜ் என்னுடைய சின்ன மாமனார். சாட்சி சுப்ரமணியம் என்னுடைய மாமனார். எதிரியை தெரியும். சம்பவ குறித்து எனக்கு நேரடியாக தெரியாது போன் மூலம் தகவல் சொன்னார்கள். என்னுடைய மனைவி பெயர் சிவன்மதி. அவருக்கும் எதிரிக்கும் பழக்கம் இருந்தது. இருவரும் வீட்டை விட்டு சென்று விட்டார்கள். நான் வேலைக்கு சென்று விட்டு வந்து தேடிப் பார்த்துவிட்டு காங்கேயம் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.13.04.2017 ஆம் தேதி மேற்படி புகாரை கொடுத்தேன். மூன்று நாட்கள் கழித்து போலீசார் அவர்கள் இருவரையும் கூட்டி வந்து விட்டார்கள். காவல் நிலையத்தில் சமாதானம் பேசி என்னுடைய மனைவி என்னுடன் தான் வருவேன் என்று சொல்லி என்னுடன் வந்து விட்டார். நான் அவரை கூட்டிக் கொண்டு என்னுடைய வீட்டுக்கு சென்று விட்டேன். பத்து நாட்கள் கழித்து ராக்கி எனக்கு போன் செய்து என்னுடைய சின்ன மகன் அவருக்கு பிறந்தது என்றும், என்னுடைய மனைவியும் சின்ன மகனையும் அவருடன் அனுப்பி வைக்கும் படியும் சொன்னார். நான் அவரிடம் போனில் பேசாதே நேரில் வா என்று சொன்னேன். அதன் பிறகு அவர் என்னை கூப்பிடவில்லை.

2. என்னுடைய சின்ன மாமனார் தங்கராசுவை எதிரி அழைத்து டார்ச்சர் செய்து வந்தார். 11.05.2017 ஆம் தேதி சுப்பிரமணியும் தங்கராசும் மாலை வெள்ளகோவில் பழைய பேருந்து நிலையத்திற்கு சென்றுள்ளார்கள் அங்கு மேற்படி எதிரி கச்சேரிவலசு டாக்டர் வீட்டில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி இருவரும் மேற்படி டாக்டர் வீட்டிற்கு சென்று இருக்கிறார்கள் டாக்டர் பெயர் தனபால் ஆகும். அப்போது அங்கு ராக்கி வெறும்மேலுடன் இருந்திருக்கிறார். அவரிடம் என்னுடைய மாமா தங்கராஜ் எதற்கு சும்மா போன் செய்கிறாய் என்று கேட்டிருக்கிறார். எதுவாக இருந்தாலும் பேசிக் கொள்ளலாம் வா என்று கூப்பிட்டுள்ளார் அதற்கு எதிரி இரு சட்டை போட்டு கொண்டு வருகிறேன் என்று சொல்லி கத்தியை ஒழிய வைத்து கொண்டு வந்து தங்கராஜை வயிற்றில் குத்துவிட்டார். அவர் குத்திவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டார்என்னுடைய சின்ன மாமனார் தங்கராசுவை இருசக்கர சுப்பிரமணியின் இருசக்கர வாகனத்தில் ஏற்றுக்கொண்டு வெள்ளக்கோயில் புது பஸ் ஸ்டாண்டுக்கு வந்துள்ளார் அங்கிருந்து ஆம்புலன்ஸ் மூலம் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அவரை கூட்டிச் சென்றுள்ளார். மருத்துவர்கள் அவரை பரிசோதித்து விட்டு ஈரோடு அரசு மருத்துவமனைக்கு கூட்டிச் சொல்லச் சொல்லி சொன்னார்கள். அங்கு மருத்துவர்கள் பரிசோதித்து பார்த்துவிட்டு ஈரோடு வரும் வழியிலேயே அவர் இறந்து விட்டதாக தகவல் சொல்லியுள்ளார்கள். தங்கராசு உடலை அங்கேயே விட்டுவிட்டு சம்பம் தொடர்பாக வெள்ளகோவில் காவல் நிலையத்தில் சுப்பிரமணி புகார் கொடுத்தார் மேற்படி சங்கதிகளை என்னிடம் சுப்பிரமணி தான் சொன்னார் மறுநாள் நாங்கள் மேற்படி தங்கராசுவின் உடலை பார்ப்பதற்காக ஈரோடு சென்ற போது போலீசார் அங்க என்னை விசாரித்தார்கள் .

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எதிரிக்கும் எனது மனைவிக்கும் எங்களது திருமணத்திற்கு பின்னிட்டு தான் பழக்கம் ஏற்பட்டது. எதிரியும் சொரியன் கிணத்துப்பாளையத்தில்தான் குடி இருக்கிறார். என்னிடம் காட்டப்படும் புகார் தான் என்னுடைய மனைவி

எதிரியுடன் சென்று தொடர்பாக நான் அனைத்து மகளிர் காவல் நிலையம் காங்கேயத்தில் கொடுத்த புகார் என்றால் சரிதான் மேற்படி **புகாரின் சான்றிட்ட நகல் எ.த.சா.ஆ.1.** மேற்படி புகாரில் புகார் கொடுக்கப்பட்ட தேதி 10.04.2017 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி புகாரை நான் பத்தாம் தேதி எழுதி வைத்து விட்டேன் அதன் பிறகு அருகில் தேடிப் பார்த்துவிட்டு கொடுக்கலாம் என்று சொல்லி 13 ஆம் தேதி புகார் கொடுத்தேன். பத்தாம் தேதி என்று எழுதப்பட்ட புகாரை 13 ஆம் தேதி கொடுத்தால் புகாரில் உள்ள தேதியை மாற்றி கொடுக்க சொல்லி போலீசார் கேட்பார்கள் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது என்னிடம் கேட்கவில்லை. நான் 13–ம் தேதிதான் புகாரை கொடுத்தேன் என்பதை காட்ட எ.த.சா.ஆ.1ல் எந்தவிதமான குறிப்பும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

2. போலீசார் என்னுடைய மனைவியையும் எதிரியையும் 16 ஆம் தேதி கூட்டி வந்தார்கள். என்னுடைய மனைவி மேற்படி விசாரணையின் போது என்னுடன் வரவில்லை என்று சொன்னதால் அவரை திருப்பூரில் இருக்கும் ஒரு ஹோமுக்கு அனுப்பி வைத்தார்கள் என்று சொன்னால் சரிதான் ஆனால் என்னுடைய மனைவி என்னுடன் வரவில்லை என்று சொல்லவில்லை. என்னுடைய மனைவி என்னுடன் வரவில்லை என்று சொல்லாமல் போலீசார் என்னுடைய மனைவியை ஹோமுக்கு அனுப்ப மாட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மனைவி மேற்படி ஹோமில் மூன்று நாட்களில் இருந்து விட்டு திரும்ப வந்து காவல் நிலையத்தில் என்னுடன் சேர்ந்து வாழ்வதாக எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். அதன்பிறகு நான் என்னுடைய வீட்டுக்கு என்னுடைய மனைவி கூட்டிச் சென்றவுடன் எதிரியும் எனது மனைவியும் அலைபேசியில் பேசி வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல.

3. என்னுடைய மாமனாரிடமும் சின்ன மாமனாரிடமும் எதிரி எப்போது எப்படி பேசினார் என்று நான் போலீசார் விசாரணையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரியும் என்னுடைய மனைவியும் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள் அதற்கு எதிரியை கொன்றால் தான் ஒரு

பிரச்சனைக்கு முடிவு ஏற்படும் என்று நானும் என்னுடைய மாமனார் சுப்பிரமணி இறந்து போன தங்கராஜ், என்னுடைய மச்சினன் கிருஷ்ணன் மற்றும் பெயர் தெரியாத அடையாளம் தெரியாத ஒரு நபரும் முடிவு செய்து இருந்தோம் என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு  பயந்து தான் எதிரி சொரியன் கிணத்து பாளையத்திலிருந்து கச்சேரி வலசுக்கு சென்று  பயந்து பதுங்கி வாழ்ந்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு பயந்து கச்சேரிவலசில் இருந்த எதிரியை நாங்கள்தான் தேடிச் சென்றுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல நான் செல்லவில்லை.  மேற்படி சங்கதிகளை என்னுடைய மாமனார் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்று நான் போலீசாரிடம் குறிப்பிட்டிருந்தேன் என்றால் சரிதான். சம்பவத்திற்கு மறுநாள் ஈரோடு அரசு மருத்துவமனைக்குச் சென்றேன்.

4. என்னுடைய  மனைவியை எதிரி கூட்டி சென்ற சமயத்தில் அவருக்கு வயது 27 என்று சொன்னால் சரிதான்.  எதிரிக்கு அப்போது வயது 24 என்று சொன்னால் சரிதான்.  சின்ன பையனான எதிரியைத்தான் என்னுடைய மனைவி கட்டாயப்படுத்தி கூட்டி சென்று விட்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் குறிப்பிட்டது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் எதிரியின்  மீது இருக்கும் விரோதத்தின் காரணமாக நான் அவருக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.11.01 19:34:27 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:145/2021 Deposition of Witness for : P.W.5**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | சிவன்மதி | Calling | |
| Husband's Name | : | உதயகுமார் | Taluk | வெள்ளகோவில் |
| Age | : | | District | திருப்பூர் |
| Village | : | சொரியன்கிணத்துப்பாளையம் | | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 01-11-2025

முதல் விசாரணை

1. நான் சொரியன் கிணத்துப்பாளையத்தில் குடியிருக்கிறேன் மில் வேலைக்கு சென்று வருகிறேன். இறந்து போன தங்கராஜ் எனக்கு சித்தப்பா முறை வேண்டும். சாட்சி சுப்பிரமணி என்னுடைய அப்பா. சாட்சி உதயகுமார் என்னுடைய கணவர். எதிரியை தெரியும். நானும் எதிரியும் பழகிக் கொண்டிருந்தோம். 05.04.2017 ஆம் வருடம் நாங்கள் இருவரும் வெளியே சென்று விட்டோம். நாங்கள் இருவரும் சேலம் சென்று விட்டோம். என்னுடைய கணவர் என்னை கண்டுபிடித்து தரச் சொல்லி காங்கேயம் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதன் பின்னிட்டு என்னுடைய கணவரும் என்னுடைய அப்பாவும் வந்து சேலத்தில் இருந்து என்னை கூட்டி வந்தார்கள். அவர்கள் இருவரும் எங்களை காங்கேயம் மகளிர் காவல் நிலையத்திற்கு கூட்டி வந்தார்கள். அதன் பிறகு நான் என்னுடைய கணவருடன் செல்கிறேன் என்று சொல்லிவிட்டு எழுதிக் கொடுத்து விட்டு வந்தேன். பத்து நாட்கள் ஆட்கள் கழித்து எதிரி எனக்கும் என்னுடைய அப்பா மற்றும் சித்தப்பாவுக்கும் போன் செய்து டார்ச்சர் செய்து வந்தார். என்னையும் என்னுடைய மகனையும் அவருடன் கூட்டிச் சென்று விட வேண்டும் என்று டார்ச்சர் செய்து வந்தார்.

இரண்டு முறை மகளிர் காவல் நிலையத்தில் சென்று இது குறித்துச் சொன்னேன். அப்போது என்னிடம் பட்டன் போன் தான் இருந்தது போலீசார் ஏதேனும் ஆதாரம் கொண்டு வந்து கொடுக்கச் சொல்லி சொன்னார்கள்.

2. 11/5/2017 ஆம் தேதி எதிரி என்னுடைய அப்பாவுக்கும் சித்தப்பாவுக்கும் போன் செய்து மீண்டும் டார்ச்சர் செய்து கொண்டே இருந்தார். என்னுடைய அப்பா என்னிடம் எதிரி அவருக்கு போன் செய்து வெள்ளக்கோயில் புது பேருந்து நிலையத்திற்கு வர சொல்லி சொன்னதாக சொன்னார். என்னுடைய அப்பாவும் சித்தப்பா தங்கராஜ் ஆகியோரும் சென்றார்கள். அங்கு போய் பார்த்தபோது அங்கு ராக்கி இல்லாததால் என்னுடைய சித்தப்பா எதிரிக்கு போன் செய்து அவர்கள் பேருந்து நிலையத்திற்கு வந்து விட்டதாகவும் ராக்கி எங்கே இருக்கிறார் என்றும் கேட்டதாகவும் சொன்னார். அதற்கு எதிரி தான் மேற்படி பேருந்து நிலையத்தில் இல்லை என்றும் கச்சேரி வலசில் மருத்துவர் தனபதி என்பவர் வீட்டில் இருப்பதாகவும் சொல்லி இருக்கிறார். பின்னிட்டு என்னுடைய அப்பாவும் சித்தப்பாவும் மேற்படி கச்சேரி வலசை சேர்ந்த தனபதி என்பவர் வீட்டிற்கு சென்றுள்ளார்கள். எதற்கு போன் செய்து டார்ச்சர் செய்து வருகிறாய் என்று எதிரியிடம் கேட்டுள்ளார்கள். அப்போது ராக்கி கத்தியால் என்னுடைய சித்தப்பாவை குத்தி விட்டதாக சொன்னார்கள். பின்னிட்டு என்னுடைய சித்தப்பாவை காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று முதலுதவி சிகிச்சை கொடுத்துவிட்டு, ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளார்கள். அங்கு செல்வதற்கு கால் மணி நேரத்திற்கு முன்பே அவர் இறந்து விட்டதாக சொல்லி இருக்கிறார்கள். மறுநாள் காலை நாங்கள் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்று சித்தப்பா பிரேதத்தை பார்த்தோம். 12.05.2017 ஆம் தேதி போலீசார் என்னை விசாரித்தார்கள்

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கும் எதிரிக்கும், உதயகுமாருடன் திருமணம் நடந்த பிறகு தான் பழக்கம் ஏற்பட்டது. எதிரியும் ஒரே பள்ளியில் படித்தோம் என்று சொன்னால் சரியல்ல. நானும் எதிரியும் பக்கத்து பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர்கள் இருந்தால்

சரிதான். நானும் எதிரியும் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும் நாங்கள் இருவரும் கன்னட மொழி பேசுபவர்கள் என்றாலும் சரிதான். குழந்தையிலிருந்து எதிரியை எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். நான் பத்தாவது வரை படித்துள்ளேன். எதிரி KSR பொறியியல் கல்லூரியில் பிஇ படித்துள்ளார் என்று சொன்னால் சரிதான். எதிரி என்னை கூட்டி சென்ற சமயத்தில் எனக்கு வயது 27 என்று சொன்னால் சரிதான். அப்போது எதிரிக்கு வயது 24 என்று சொன்னால் சரிதான். எனக்கும் எதிரிக்கும் பழக்கம் ஏற்பட்டபோது எனக்கு திருமணம் ஆகி இரண்டு குழந்தைகள் இருந்தார்கள் என்றால் சரியல்ல ஒரு குழந்தை இருந்தது. இரண்டாவது குழந்தை எனக்கும் எதிரிக்கும் பிறந்ததாக ஒரு பிரச்சனை உள்ளது என்றால் அது பொய்யாகும். இரண்டாவது குழந்தை என்னுடைய கணவர் உதயகுமாருக்கு பிறந்தது என்றால் சரிதான். எனவே என்னுடைய இரண்டாவது குழந்தையை என்னிடம் கொடு என்று எதிரி கேட்பதற்கு வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரிதான்.

2. சேலத்திற்கு நான்தான் எதிரியை கூட்டிச் சென்றேன் என்று சொன்னால் சரியல்ல எதிர் தான் என்னை கூட்டி சென்றார். என்னுடைய கட்டாயத்தின் பேரில்தான் எதிரி என்னை சேலம் அழைத்துச் சென்றார் என்று சொன்னால் சரியல்ல. எதிரி என்னை கூட்டிச் செல்லாவிட்டால் அவர் மீது பாழியல் புகார் கொடுத்து விடுவேன் என்று மிரட்டி தான் எதிரியை நான் கூட்டிச் சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தொந்தரவு தாங்க முடியாமல் தான் எதிரி என்னுடைய கணவருக்கும் என்னுடைய அப்பாவுக்கும் போன் செய்து அவர் நாங்கள் இருவரும் சேலத்தில் இருப்பதாகவும் வந்து அழைத்துச் செல்லுமாறும் சொன்னார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சமயத்தில் என்னிடம் பட்டன் போன் இருந்தது எதிரியிடம் டச் போன் இருந்தது. டச்போனை வைத்து நாங்கள் எங்கே இருக்கிறோம் என்ற இடத்தை கண்டறிய முடியாது என்று சொன்னால் சரியல்ல. செல் லொகேஷனை வைத்து தான் என்னுடைய அப்பாவும் கணவரும் எங்களை தேடி சேலத்திற்கு வந்தார்கள் என்று என்னிடம் சொன்னார்கள்.

3. காவல்துறையின் உத்தரவின்றி ஒருவருடைய கால் ரெக்கார்ட்ஸ் மற்றும் டவர் லொகேஷனை கொடுக்க மாட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் தனிநபர்கள் மூலம் டவர் லொகேஷனை கண்டறிந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா மற்றும் கணவருடன் போலீசார் வந்து எங்கள் இருவரையும் கூட்டி வந்தார்கள். அனைத்து மகளர் காவல் நிலையத்திற்கு எங்களை கூட்டி வந்த தேதி எனக்கு நினைவில்லை. நான் எனது கணவருடன் செல்ல மறுத்ததால் தான் என்னை மூன்று நாட்கள் திருப்பூரில் உள்ள ஒரு ஹோமுக்கு அனுப்பி வைத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. திருப்பூர் ஹோமில் நான் மூன்று நாட்கள் இருந்தேன் என்றால் சரிதான். என்னுடைய கணவர்தான் வீட்டில் இருக்கும் அனைவரும் கோவமாக இருப்பதால் மூன்று நாட்கள் ஹோமில் இருக்கச் சொல்லி என்னிடம் சொன்னார். அப்போது என்னுடைய அப்பா எங்களை ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் இல்லை. நான் என் கணவர் மற்றும் தந்தையுடன் செல்ல மறுத்ததால் குழந்தையுடன் வெளியே இருக்கக் கூடாது என்பதற்காக போலீசார் உத்தரவின் பெயரில் தான் நான் மூன்று நாட்கள் திருப்பூர் ஹோமில் தங்க வைக்கப்பட்டேன் என்று சொன்னால் சரியல்ல மேற்படி சங்கதியை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 4

4. திருமணம் ஆகி குழந்தை இருக்கும் பெண்ணை போலீசாரின் உத்தரவின்றி ஹோமல் வைக்க மாட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல என்னை ஒரு பெண் போலீஸ் தான் என்னை ஹோமில்கொண்டு விட்டார். நான் ஹோமிலிருந்து என்னுடைய கணவருக்கு போன் மூலம் தகவல் கொடுத்து அதன் பிறகு காவல் நிலையத்திற்கு வந்தேன். காவல் நிலையத்தில் நான் என்னுடைய கணவருடன் செல்வதாக மூன்று நாட்கள் கழித்து எழுதிக் கொடுத்து விட்டு சென்றேன். ஆனால் எதிரி எப்போது சேலத்தில் இருந்து அழைத்து வந்தாரோ அன்றைய தினமே எழுதிக் கொடுத்து விட்டு சென்று விட்டார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் மனுதான் நான் காவல் நிலையத்தில் எழுதிகொடுத்ததுதான். மனு

அதில் என்னுடைய கணவர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். **அந்த மனு எ.ம.சா.ஆ.2**. என்னை சேலத்தில் இருந்து கூட்டி வந்த தேதியில் போலீசார் என்னிடம் எதுவும் எழுதி வாங்கவில்லை. எ.ம.சா.ஆ.2ல் தேதி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணம் இந்த வழக்குக்காக தயாரிக்கப்பட்டதால் தான் தேதி குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5. என்னுடைய கணவர் வீட்டுக்கு சென்ற பிறகும் நான் எதிரியை தொடர்ந்து போன் மூலம் தொடர்பு கொண்டு என்னுடன் சேர்ந்து வாழச் சொல்லி துன்புறுத்தி வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வைத்திருந்த ஃபோன் எதிரியின் ஃபோனாகும் அதை நான் ஹோமிலிருந்து செல்லும்போது பெண் போலீசிடம் கொடுத்து விட்டு சென்று விட்டேன். எனவே என்னிடம் ஃபோன் எதுவும் இல்லை. எதிரிக்கு தற்போது திருமணம் ஆகி இரண்டு குழந்தைகள் உள்ளது என்று சொன்னால் அதுகுறித்து எனக்கு தெரியாது. எதிரிக்கு முதல் குழந்தை பிறந்த பிறகு நான் எதிரியை தொடர்பு கொண்டு என்னுடனும் சேர்ந்து வாழச் சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல. நான் என்னுடைய கணவர் வீட்டுக்கு சென்ற பிறகு மீண்டும் எதிரியுடன் பழகிக் கொண்டிருந்ததால் எதிரி மீது என்னுடைய குடும்பத்தாருக்கு கோபம் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய குடும்பத்தாரின் அச்சுறுத்தலுக்கு பயந்து தான் எதிரி கச்சேரி வலசுக்கு சென்று பாதுகாப்பாக தங்கி இருந்தார் என்று சொன்னால் அவர் பயந்து கொண்டு எல்லாம் செல்லவில்லை. சொரியன் கிணத்து பாளையத்தில் எதிரி தங்காததற்கான காரணம் எனக்கு தெரியாது. எனக்கும் எரிக்கும் இருக்கும் பழக்க வழக்கத்தை முடிப்பதற்காக எதிரியை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் என்னுடைய அப்பா, சித்தப்பா, எனதுகணவர், என் தம்பி மற்றும் அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத ஒரு நபரும் எதிரியை தேடி கச்சேரிவலசுக்கு சென்றார்கள் என்று சொன்னால் சரியல்ல கேட்பதற்காக தான் சென்றார்கள்.

6. எதிரி போன் செய்து வரச் சொன்னதால்தான் என்னுடைய சித்தப்பாவும் அப்பாவும் மேற்படி இடத்திற்கு சென்றார்கள். மேற்படி சமயத்தில் ந என்னுடைய அப்பா ஒரு ஹீரோ ஹோண்டா பைக் வைத்திருந்தார். அது என்னுடைய அப்பா பெயரில் இருந்ததா என்றால் அது எனக்கு தெரியாது என்னுடைய அப்பா அதில் தான் வேலைக்குச் சென்று வந்தார் என்றால் சரிதான். என்னுடைய சித்தப்பா ஒரு டிவிஎஸ் எக்ஸ்எல் வாகனம் வைத்திருந்தார். அது யாருடைய பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. மேற்படி டிவிஎஸ் வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது. என்னுடைய சித்தப்பா டிரைவர் ஆக வேலை செய்து வந்தார். என்னுடைய சித்தப்பாவின் வண்டி முழுவதும் ரத்தம் ஆகி இருந்தது என்று சொன்னால் அதை நான் பார்க்கவில்லை. ராக்கி பாக்கச் செல்லும்போது என்னுடைய சித்தப்பா தான் மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றுள்ளார். சம்பவத்திற்கு பிறகும் என்னுடைய சித்தப்பாதான் வண்டியை ஓட்டிவந்தார். எதிரியை தாக்குவதற்காக என்னுடைய குடும்பத்தார் சென்று எதிரியை தாக்கும் போது ஏற்பட்ட விபத்தில் என்னுடைய சித்தப்பா இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சம்பவத்தில் எதிரிக்கும் கைகளில் காயம் ஏற்பட்டது என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. எனது சித்தப்பா இறந்தது தொடர்பாக நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை.

7. சம்பவ சமயத்தில் எனது சித்தப்பாவுக்கு வயது 35 என்றால் சரிதான் மேற்படி சமயத்தில் எதிரி ஒல்லியாக இருப்பார் என்று சொன்னால் சரிதான். என்னுடைய சித்தப்பாவை தாக்கும் அளவுக்கு எதிரிக்கு அப்போது வலு இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கு குழந்தை பிறந்த பிறகு என்னிடம் அவர் தன்னை தொந்தரவு செய்ய வேண்டாம் என்றும் என்னுடைய வாழ்க்கையை நான் பார்க்க வேண்டும் என்று சொன்னதால் கோபம் கொண்டு அவருக்கு எதிராக நான் தற்போது சாட்சியம்அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ சமயத்தில் எனக்கு செல்போன் இல்லை என்னுடைய அப்பாவுக்கு இருந்தது. எனக்கு எதிரியின் செல் நம்பர் தெரியும். மேற்படி செல் நம்பர் 80173

மீத எண்கள் தற்போது மறந்துவிட்டது. நான் சொல்வதுபோல் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.11.01 19:34:37 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.